# சொட்டு நீர் பாசனத்தால் அமோக விளைச்சல் : பொள்ளாச்சி பகுதியில் விவசாயிகள் பூரிப்பு

பிப்ரவரி 21,2009,00:00 IST



பொள்ளாச்சி : பொள்ளாச்சி பகுதி விவசாயிகள் வேளாண் துறை மூலம் அறிமுகப்படுத்தப் படும் நவீன தொழில்நுட்பங்களை கை யாண்டு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் முறைக்கு மாறி வருகின்றனர்.பொள்ளாச்சி தாலுகாவில் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வடக்கு, தெற்கு மற்றும் ஆனைமலை ஆகிய நான்கு ஒன்றியப்பகுதிகளில் குறைந்தளவு தண்ணீரை கொண்டு அதிக பரப்பில் சாகுபடி செய்வதால் உலக வங்கி நிதியுதவியில் நீர்வள மற்றும் நிலவள திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதுவரையிலும், தென்னை விவசாயிகள் மட்டுமே சொட்டு நீர் பாசன முறைக்கு மாறி இருந்தது. தற்போது, கரும்பு, மா, வாழை விவசாயிகளும் சொட்டு நீர் பாசன முறைக்கு மாறத்துவங்கியுள்ளனர். தற்போது, தானிய பயிர்களுக்கு தெளிப்பு நீர் பாசனம் அமைக்கும் முறையை வேளாண் துறை அதிகாரிகள் அறிமுகப்படுத்தியுள்ளனர். நிலக்கடலை, தட்டைப்பயிறு, உளுந்து மற்றும் தானிய வகைகளுக்கு தெளிப்பு நீர்

பாசனம் அமைத்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவது பற்றி பயிற்சி கொடுக்கின்றனர். ஆனைமலை பகுதியில் மக்காச்சோள பயிர்களுக்கு விவசாயிகள் பரிச்சார்த்த முறையில் தெளிப்பு நீர் பாசனம் அமைத்துள்ளனர். விவசாயிகள் கூறுகையில், "ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு வரும் நிலையில் வேளாண் தொழில் நுட்பங்களை முறைகளை கையாண்டு பாசனம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டிய கட்டாயமும் உள்ளது. இருக்கும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் எடுக்க நவீன தொழில்நுட்ப முறைக்கு மாறி வருகிறோம். பெரிய விவசாயிகள் மட்டுமன்றி சிறு, குறு விவசாயிகளும் நவீன தொழில்நுட்ப முறைகளை கையாளும் வகையில் பயிற்சிகள் கொடுக்க வேண்டும். மானியம் விவசாயிகளுக்கு நேரடியாக கிடைக்க வேண்டும்' என்றனர். பொள்ளாச்சி பகுதியில் சொட்டு நீர் பாசன முறை போல் உடுமலை மற்றம் மடத்துக்குளம் பகுதிகளில் வேளாண் துறை செயல்படுத்தினால், கோடை காலத்தில் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையை தவிர்த்து விவசாயிகளின் குறைகளை தாராளமாக நிவர்த்தி செய்யலாம்.